## சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில இலாப எதிர்ப்பு பரிசோதனைக்குழு அமைப்பு பற்றிய அறிவிப்பு

மத்திய சரக்கு மற்றும் சேவை வரி விதிகள் 123(2) வழங்கியுள்ள அதிகாரத்தை செயல்படுத்தும் விதமாக தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மாநில அளவிலான பரிசோதனை குழுவை தமிழ்நாடு மாநிலத்திற்காக கீழ்க்கண்ட அதிகாரிகளைக் கொண்டு அமைத்துள்ளார்.
அவர்கள்

1. திருமதி. க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,
   இணை ஆணையர் (மாநிலவரி), செயலாக்கம்,
   சென்னை-600 006.

2. திரு. எம். ஸ்ரீதர் ரெட்டி,
   ஆணையர்,
   சரக்கு மற்றும் சேவை வரி,
   சென்னை வடக்கு ஆணையரகம்,
   சென்னை.

நுகர்வோர் வரிகுறைப்புப் பலன் தனக்கு கிட்டவில்லை எனக் கருதினால் அந்நிறுவனங்களின் பேரில் நடவடிக்கை எடுக்கக்கோரும் விண்ணப்பத்தினை தேசிய இலாப எதிர்ப்பு குழுமத்தின்கீழ் செயல்படும் மாநில பரிசீலனைக்குழு மற்றும் மத்திய நிலைக்குழுவிற்கு அனுப்பலாம்.

அவ்வாறு அனுப்பப்பட்ட விண்ணப்பங்களை பரிசீலனை செய்வதற்கு தேசிய இலாப எதிர்ப்பு குழுமத்தின் கீழ் செயல்பட எல்லா மாநிலங்களிலும் பரிசோதனை குழுக்களை அமைக்க சரக்கு மற்றும் சேவை வரிச்சட்ட விதி 123 (2)ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இலாப எதிர்ப்பு நடவடிக்கை எடுக்கக் கோரும் விண்ணப்பம் ஒரு மாநிலத்தில் அமைந்திருக்கும் வணிகம் தொடர்பான உள்ளூர் விவகாரம் எனில் அதனை மாநில அளவிலான பரிசோதனைக் குழு ஆய்வு செய்வர். மாநில அளவிலான பரிசோதனைக்குழு ஆய்வின் முடிவில் தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரி விதிகள் 2017ன் கீழ் இலாப எதிர்ப்பு

தொடர்பாக முதற்கட்ட ஆதாரம் இருப்பதாக அறிந்தால் அந்த விண்ணப்பத்தினை தங்களது பரிந்துரைகளுடன் மத்திய நிலை குழுவிற்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைப்பர்.

∴

தேசிய இலாப எதிர்ப்பு குழுமம், இலாப எதிர்ப்பு நடவடிக்கைகளை அமல்படுத்த தொடர்புடைய வணிக நிறுவனத்திடம் அதன் விலையைக் குறைக்க ஆணையிடவும், அல்லது மிதமிஞ்சிய பயன்களை சரக்குகள் மற்றும் சேவைகளைப் பெறுவோரிடம் வட்டியுடன் ஒப்படைக்குமாறு உத்திரவிடவும், மிதமிஞ்சிய பயன்களை செலுத்த இயலாத நிலையில் அதனை நுகர்வோர் மேம்மாட்டு நிதியில் வைப்பதற்கும் உத்திரவிட அதிகாரம் உள்ளது.

சில தீவிர வழக்குகளில் தேசிய இலாப எதிர்ப்பு ஆணையத்திற்கு தவறு செய்த வணிக நிறுவனம் மீது அபராதம் விதிக்கவும், உரிமத்தை ரத்து செய்யவும் உரிமையும் உள்ளது.

இதன் அடிப்படையில் மாநில அளவிலான பரிசோதனை குழுவின் செயல்பாடு இணை ஆணையர் (மாநில வரி) அலுவலகம், செயலாக்கம்-1, மாநில வரித்துறை, கீரிம்ஸ் சாலை, சென்னை -6 என்னும் முகவரியில் நடைபெறும். இலாப எதிர்ப்பு குறித்த எந்த ஒரு புகாரையும் பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பில் இணை ஆணையர் (மாநிலவரி) அலுவலகம், சென்னை-6 என்று முகவரிக்கு அனுப்பலாம். தொலைபேசி எண் 044-28293817. தொலைநகல் - 044-28291717. மின்னஞ்சல் - jcenf.chn1@ctd.tn.gov.in.

**வணிகவரித் துறை.**